2009 ஜூலை 8]

இதுபோன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற நேரத்தில், அதற்கான தடுப்புப் பணிகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று அரசு அதிகாரிகளோடு நம்முடைய கலைஞருடைய அரசு ஆலோசித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***29459—திரு. கோ. அரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, மணவாள நகர், பேரம்பாக்கம், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருத்தணி தொகுதியிலுள்ள மணவாள நகர், பேரம்பாக்கம், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 35 கி.மீ. தூரத்தில் உள்ள திருவள்ளூர் அருகில் காக்களூரில் 50,000 லிட்டர் திறன்கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலும் பால் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பால், சில நேரங்களில் 35 கி.மீ., 40 கி.மீ. தூரம் எடுத்துச்செல்ல வேண்டிய சூழ்நிலையில்,*

பதப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் கெட்டு வீணாகிவிடுகின்ற ஒரு சூழ்நிலையில், அந்தப் பகுதியிலே திருவள்ளூர் அல்லது திருத்தணியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாள நகர் பகுதியில் புட்லூர், மணவாள நகர் ஆகிய பகுதிகளில் 12 லிட்டர் பாலும் பேரம்பாக்கம் பகுதியிலுள்ள ஆறு கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக 227 லிட்டர் பாலும் . . .

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: பட்டரைப்புதூரிலுள்ள பால் வழித் தடத்தின்மூலம் 45 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பாலுச்செட்டிச்சத்திரம் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. திருவாலங்காடு பகுதியிலுள்ள 6 கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக 872 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படிக் கொள்முதல் செய்யப்படுகிற பால் 12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பட்டரைப்புதூரில் அமைந்துள்ள 5,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட பால் குளிர்விப்பான்மூலமாகக் குளிரூட்டப்படுகிறது. அதேபோல, திருத்தணி பகுதியில் கே.ஜி. கண்டிகையில் 5,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட குளிர்விப்பான் உள்ளதால், அந்தப் பகுதியிலுள்ள 7 சங்கங்களிலிருந்து பால் எடுக்கப்பட்டு அங்கு குளிரூட்டப்படுகிறது. அதோடு, சந்தானகோபாலபுரம், தம்பிகுளம், சங்கரதேவபுரம், வேளச்சேரி, ஆகூர், வி. மேட்டூர், தலையாரித்தாங்கல், சிறுகநல்லூர் அண்ணா, கே.ஜி. கண்டிகை, புதுக்கச்சீலம் Society of TMFI ஆகிய பகுதிகளிலிருந்து 3,753 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அங்கே 5,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட ஒரு பால் குளிர்விப்பான் உள்ளதால். மேற்கண்ட 4 பகுதிகளிலிருந்தும் கொள்முதல் செய்யப்படுகிற பாலினைக் குளிர்விப்பதற்குக் குளிர்விப்பான்கள் அமைந்திருக்கிற காரணத்தால். மேற்கொண்டும் ஒரு புதிய குளிர்விப்பான்

2009 ஜூலை 8]

அமைப்பதற்குத் தற்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 லிட்டர், 10,000 லிட்டர் என்ற அளவிற்கு இருந்தாலுங்கூட, திருவள்ளூர் தலைநகரமாக இருப்பதால், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து கொண்டுவரும் பாலைப் பதப்படுத்துவதற்கு வசதியாக, சுமார் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்ட பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு, வருகின்ற நிதியாண்டிலாவது சிறப்பு நேர்வாகக் கருதி இதனை அமைத்திட வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கிறபோது பல கோடி ரூபாய் செலவாகிறது. அதற்காகத்தான் அந்தந்தப் பகுதிகளிலேயே 5,000 லிட்டர், 2,000 லிட்டர் என்று கொள்முதல் ஆகக்கூடிய பாலை அந்தந்தப் பகுதிகளிலேயே குளிர்வித்து பால் கெட்டுவிடாமல் பாதுகாப்பதற்காகத்தான் மொத்தக் குளிர்விப்பான்கள் செய்யப்படுகின்றன. ஆகவே, அந்த அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளிலே கிடைக்கக்கூடிய பாலினை உடனடியாகக் குளிர்விக்கும் பணியைச் செய்து, சுத்தப்படுத்தி, தூய்மையாக வைத்துக்கொள்வதற்காகவும், கெட்டுவிடாமல் பாதுகாப்பதற்காகவும் பால் குளிர்விப்பான்கள் அமைப்பது இப்போது செயல்படுத்தப்படுகிற காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் அதுபோன்ற குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்குமேயானால் நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற ஓர் அரசு.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பல்வேறு நன்மைகளை விவசாயிகளுக்குச் செய்திருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது, பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று. சாதாரணமாக, Bisleri water கூட நிறைய விலைக்கு விற்கப்படுகிறது; குறைவான விலையில் நீங்கள் பால் கொள்முதல் செய்கிறீர்கள்; மேலும், மாட்டுத் தீவனத்தின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது; மற்ற பொருள்களின் விலையெல்லாம் உயர்ந்திருக்கிறது, மாட்டின் விலையும் உயர்ந்திருக்கிறது; ஆனால், பாலின் கொள்முதல் விலை உயரவில்லை என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. அவர்கள் நாளை முதலோ, நாளை மறுநாள் முதலோ அரசுக்குப் பால் கொடுப்பதில்லை என்று ஒரு முடிவெடுத்திருக்கின்றார்கள். அதனாலே, தமிழக முதல்வர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக நிறைய கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. டி. சுதர்சனம்: தலைவர் அவர்களே, நான் கேள்விதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேளுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: உடனடியாக அந்த விவசாயிகளை அழைத்துப் பேசி நல்ல முடிவை அறிவிப்பார்களா? பால் உற்பத்தியாளர்களுடைய உள்ளத்திலே பால் வார்ப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களிடத்திலே ஒரு உத்தரவாதம் பெற விரும்புகின்றேன். பால் விலையை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், பயனாளிகள் சார்பாக அப்போது நம்முடைய திரு. டி. சுதர்சனம் அவர்கள் பேசாமல் இருப்பாரா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீங்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது,

2009 ஜூலை 8]

இதேபோன்று பால் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டபோது, 50 பைசா உயர்த்திக் கொடுத்து, அரசு மானியமாகக் கொடுத்தீர்கள். அதேபோன்று இதையும் அரசு மானியமாகக் கொடுக்க கருணையுள்ள முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அவர்களிடத்திலே பேசி நல்ல முடிவு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

முற்பகல் 10–35

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஆவின் பாலுக்குக் கடுமையான தட்டுப்பாடு இருக்கின்றது. சுமார் 12,40,000 லிட்டர் பால் சென்னையில் வழங்கப்பட்டாலும், அதனுடைய தேவை, மேலும் சுமார் 15,00,000 லிட்டர் என்ற நிலை இருக்கக்கூடிய சூழ்நிலையில், தரமான ஆவின் வெள்ளைப் பால், கறுப்புப் பணத்தில், அதாவது இரண்டு ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, தயவுசெய்து, மற்ற ஒன்றியங்களில் excessive–ஆக இருக்கக்கூடிய பாலை, இங்கே சுமார் 3,00,000 லிட்டர் பாலை சென்னைக்குப் பெற்று, இங்குள்ள தட்டுப்பாட்டைத் தீர்க்க இந்த அரசு உதவி செய்யவேண்டும். அப்போதுதான், மக்களும் பால் மாறாமல் ஆவினிலேயே இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 22,00,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அதிலே 10,09,000 லிட்டர் பால் சென்னை மாநகரத்திற்கு வினியோகம் செய்யப்படுகின்றது. தனியார் பால் விலை அதிகமாக

இருக்கின்ற காரணத்தினாலும், நுகர்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலும், அவர்கள் ஆவின் பாலை அதிகம் விரும்பி வருகின்ற காரணத்தினாலும், அதிக தேவை (demand) இருக்கின்றது. இன்றைக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, ஒன்றியங்களிலிருந்து அதிகமாக பால் கொள்முதல் செய்யப்பட்டு, நகரங்களுக்கு, சென்னை போன்ற மாநகரங்களுக்கு அதிகமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இன்றைக்கு 5,000 பால் உற்பத்தியாளர்களுக்கு 10,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இருக்கின்றது. இதன்மூலம் பால் உற்பத்தியினை அதிகரிக்க செய்து, சென்னை மாநகரத்திற்கு மேலும் பால் demand இல்லாமல், பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) மதுரை மாவட்டம், வடக்கம்பட்டி கிராமம், பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, Speaker Sir, ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நிறைய உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) மதுரை மாவட்டம், வடக்கம்பட்டி கிராமத்தில் 7–7–2009 அன்று இரவு பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக 18 பேர் பலியானது மற்றும் பலர் காயமுற்றது குறித்து விதி 55, 56–ன் கீழ், Notice கொடுத்திருக்கிறார்கள். அதை நான் முதலில் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, பயிற்சி டாக்டர்கள் ஏற்கெனவே பல நாட்களாக...(குறுக்கீடு)